பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்டி

மலர்: 15] சென்னை: புரட்டாசி 19உ (5—10—67) வியாழன் வெளியூர்: புரட்டாசி 20உ (6—10—67) வெள்ளி [இதழ்: 94

காங்கிரசின் கயமைப் போக்குக்கு மேலும் ஒரு 'கறை'

அரசியல்புஸ்வாணமாகிவிட்டது வங்காளத்துக் குழப்பம்!

'சீசாப் பலகை'யில் அஜாய் முகர்ஜி --- 'எப்பக்கம் சாய்வார்' என்பது கேள்விக் குறி!

கடந்த இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் மேற்கு வங்க அமைச்சரவை பற்றிய செய்திகள் மேலும் ஒரு எதிர்பாராத திருப்பத்தைத் தந்திருக்கின்றன!

'இன்று ஒரு முடிவு தெரியும்' என திருந்த நிலைமை மாறி, 'நாளை (அக். 6) மாலையே இறுதி நிலவரம்' என்னும் நிலை தோன்றியிருக்கிறது.

"கம்யூனிஸ்டு உறுப்பினர்களும் வெளியேறுவதாக இல்லை—முகர்ஜியின் அமைச்சரவையும் பதவி விலகுவதாக இல்லை" என்ற புதிய அறிகுறிகளை நோக்கி வங்க அரசியல் நிலைமைகள் செல்வதாகத் தெரிகிறது!

"இருக்கின்ற கம்யூனிஸ்டுகளின் 'தொல்லை'க்காக பயந்து காங்கிரசின் பக்கம் சாயப் போய், பின்னர், அதுவும் 'பெருந்தொல்லை' யாகப் போய்விடுமோ என்று அஜாய் முகர்ஜி சிந்தித்ததன் விளைவாகத்தான், எதிர்பார்த்த செய்தி வெளிவரவில்லை" என்று பார்வையாளர்கள் கருதுவதாகத் தெரிகிறது!

நம்நாடு செய்தி நோக்கு

வங்காளத்தில் புதிதாக ஒரு காங்கிரசுக் கமிட்டியை அமைப்பதன் மூலம் அஜாய் முகர்ஜியின் பாரவையை வசிகரித்து—அமைச்சரவையிலிருந்து கம்யூனிஸ்டுகளை வெளியேற்றி—அங்கே தனக்குச் செல்வாக்குத் தேடிக்கொள்ள முயன்ற காங்கிரசின் 'நந்தா திட்டம்', இவ்வாரக இப்போது இரண்டாவது தோல்வியினைப் பெற்றிருக்கிறது!

எதிர்பார்த்தபடி, கம்யூனிஸ்டுகள் அமைச்சரவையிலிருந்து வெளியேறுவிட்டால் அல்லது வெளியேற்றப்பட்டிவிட்டால் என்ன செய்வது என்பதனை, காங்கிரசு முன்கூட்டியே யோசனை செய்து, இப்போதே சில திரைமறைவு வேலைகள் நடத்துவதாகக் தெரிகிறது!

உமாபூன் கபீர், அரிகிருஷ்ண மகதாய் ஆகியோர், இப்போது பி. சி. கோஷ் என்னும் சுபேச்சை அமைச்சரின் புதிய தலைமையின் கீழ், அஜாய் முகர்ஜிக்கு எதிராகத் திரண்டெழுந்திருக்கின்றனர்!

இந்த முயற்சிக்குக் காங்கிரசு மேலிடம் ஆதரவு தருவதன் மூலம், தனது அடிப்படை எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுமெனவும் நம்பப்படுகிறது.

'என்ன சமாச்சாரம்?'-- 'குச் நஹி ஹை'!

"என்ன சமாச்சாரம்?" என்று தமிழில் கேட்ட ஒரு வடக்கத்திய செய்தியாளரிடம் காமராசர், இந்தியில். 'குச் நஹி ஹை' என்று கூறினாராம்; அதாவது, 'ஒண்ணுமில்லே' என்று சொல்லியிருக்கிறார்!

ஒன்று, இரண்டா—சொல்லி முடிப்பதற்கு!

'என்ன சமாச்சாரம்?' என்று இரண்டே வார்த்தைகளில் கேட்டுவிட்டார் செய்தியாளர்!

எதையென்று சொல்வார் காமராசர்?

மணிப்பூரில் காங்கிரசின் பத்தாண்டுக்கால வாழ்வு பறிபோனதைக் கூறுவாரா?

வங்காளம் பற்றிய நந்தாவின் திட்டம், 'ஏமாளித்தனமாக'ப் போனதைத் தெரிவிப்பாரா?

இந்திராவுக்கும்--தனக்குமுள்ள கருத்துவேற்றுமை பற்றிப் பேசுவாரா?

காங்கிரசின் அடுத்த தலைவர் யார் என்பதைத்தான் 'ஜாடை' யாகக் காட்ட முடியுமா?

இப்படி, தலைக்கு மேலே போய்விட்ட பிரச்சினைகள் எத்தனையோ? இதைப் போய் அளந்து கொண்டிருக்க முடியுமா?

'குச் நஹி ஹை'—பொருத்தமான பதில்தான்!

—'பாக்சர்'

இதுவரையில் இல்லாத பொருளாதார மந்த நிலை இந்த ஆண்டு ஏற்படும்

மத்திய -- மாநில அரசுகளின் பற்றுக்குறை உச்சக்கட்டத்தை அடையும்

திட்டங்களில் வெட்டு --- நிதி நிலை அறிக்கையில் தேக்க நிலை

இப்போதுள்ள பொருளாதாரச் சூழ்நிலைகளின்படி பார்த்தால் மத்திய—மாநில அரசுகளின் நிதிப் பற்றுக்குறை, இந்த ஆண்டில் இதுவரையில் ஏற்படாத உச்சக்கட்டத்தை அடையும் என்பதாகப் புதுடில்லிச் செய்தி ஒன்று கூறுகிறது.

இத்தகவல் மேலும் தெரிவிப்பதாவது :—

தமது சென்ற 'பட்ஜெட்'டின் போதும், பதவி ஏற்றபோதும், 'பற்றுக்குறை பட்ஜெட்டைத் தயாரிக்க மாட்டேன்' என்று மொரார்ஜி கூறியிருந்தபோதிலும், இப்போதுள்ள நிலைமைகளின்படி அது அவரால் முடியாத காரியம் என்றும், வருகிற 'பட்ஜெட்'டிலேயே அவர் மிகப் பெரிய பற்றுக்குறையைச் சந்திக்க இருக்கிறார் என்றும் தெரிய வருகிறது!

"கடுமுலான நிதி வசதிகளை எதிர்பார்த்து இந்த ஆண்டு துவங்க இருக்கும் எல்லாத் திட்டங்களையும் ரத்து செய்ய வேண்டிவரும்" என்று அரசுக்கு, திட்டக் குழு, அறிவித்திருக்கிறது.

"எதிர்பார்த்தபடி விவசாய உற்பத்தி இருந்தாலும், நாட்டின் மற்றைய பொது நிலைமைகள் சீராக இல்லாததால், பொருளாதார மந்த நிலை இருக்தே தீரும்" என திட்டக் குழு கூறியிருக்கிறது.

விவசாய வரித் வருவாய்—எருமானியம்—உணவு மானியம்—என மாநில அரசுகள், ஏற்கனவே கணிசமான நிதியை இழந்து வரும் நிலையில், திட்டங்களுக்குத் தேவையான கடுமுலான நிதிகளை அவைகள் எழுப்பும் நிலை இல்லை என்பதும் உண்மையே!

ஏறக்குறைய இதே நிலையில்தான் மத்திய அரசும் இருக்கிறது!

வரி பாக்கிகள் போன்றவற்றைத் தீவிரமாக வசூல் செய்ய மத்திய அரசு முயன்று கொண்டிருக்கிறது. இருந்த போதிலும், தேவையான நிதியின் தொகை பெரிய அளவில் இருப்பதால், அந்த முயற்சியும் பற்றுக்குறையை நிறைவு செய்யும் வகையில் இருக்காது!

இந்த ஆண்டில் மட்டும் நாடு முழுவதுலுமுள்ள மாநில அரசுகள் தயாரிக்கும் 'பட்ஜெட்'டுகளின் மொத்த பற்றுக்குறை, ரூ. 68 கோடியாக இருக்குமென நம்பப்படுகிறது!

மாநில அரசுகள் விவசாய வரியையும் ரத்து செய்தால், இத் தொகையே ரூ. 200 கோடியாகவும் உயரும் எனத் தெரிகிறது.

ஐந்து பேராசிரியர்கள் தற்கொலை!

பீகிங் பல்கலைக் கழகத்தில், அண்மையில் ஐந்து பேராசிரியர்கள் தற்கொலை செய்துகொண்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

செங்காவலர் (இழைத்த அவமானம் தாங்காமலேயே அவர்கள் உயிரை மாய்த்துக்கொண்டனராம்.

தீவிபத்து நிவாரண நிதி

கலை விழா மூலம் ரூ. 1,02,001

முதலமைச்சர் அண்ணாவிடம் அளிக்கப்பட்டது

சென்னை, அக். 4—

தீவிபத்துத் துயர் துடைப்பு நிதிக்காகச் சென்னையில் நடைபெற்ற கலை விழாக்கள் மூலம் இதுவரையில் சிடைத்த ரூ. 1,02,001-ஐ, முதலமைச்சர் அண்ணா அவர்களிடம், செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அளித்தார். (பாலர் அங்கில் நடைபெற்ற திரைப்படக் காட்சிகள் மூலம் சேர்ந்த நிதியும் இதில் அடங்கும்).

இன்று மாலை 5-30 மணியிலிருந்து சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கலை விழா நடைபெற்றது.

தமிழகத்தின் கலைஞர்கள் பலர் பங்கேற்றனர்.

இசை விருந்தும், கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் நடைபெற்றன.

நிகழ்ச்சிகளைப் பற்றிய முன்னுரை தரும் பொறுப்பை, இலட்சிய நடிகர் எம். எஸ். இராசேந்திரன் ஏற்று சிறப்புப் பணியாற்றினார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசி, அறிஞர் அண்ணாவிடம் நிதியினை அளித்தார்.

நிதியினைப் பெற்றுக்கொண்ட முதலமைச்சர் அண்ணா அவர்கள், இத்துறையில் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழக இன்னல்களுக்கு ஆட்பட்டபோதெல்லாம் நமது கலைஞர்கள் தட்டாமல் தங்கமாமல் உதவி புரிந்திருக்கிறார்கள். இதற்காக அந்தக் வள்ளல் தன்மை மிக்க கலைஞர்களுக்கு தமிழகமும் தமிழக அரசும் கடமைப்பட்டிருக்கிறது.

(4 ம் பக்கம் பார்க்க)

தருவாளர் சந்தேகம்

காங்கிரசு மேலிடம் பார்வையாளராக அனுப்பிய பாட்டீல், பார்வையாளராகவே இருந்து போய்விடுவார் போலிருக்கிறது!

நேற்று இரவு வந்த அவர் இன்று இரவு திருப்பதியில் தங்கிவிட்டு நாளை காலை சென்னைக்கு வருகிறார்—டில்லிக்குப் போவதற்காக!

தமிழகக் காங்கிரசு பற்றி இதற்குள் அவர் என்ன கண்டறிந்து கொண்டுபோகப் போகிறாரோ தெரியவில்லை!

இருந்தாலும், முன்னெச்சரிக்கையாக, 'இது ஒரு 'சாம்பிள்' முயற்சிதான்; இன்னும் வருவேன் பின்னால்' என்று கூறியிருக்கிறார்!

"காங்கிரசின் கண்காணிப்புத் தேவதை'யான காமராசர்மாநிலத்தில், காங்கிரசு பற்றி என்ன இருக்கிறது கண்டுபிடிக்க-குற்றம் காண" என்று 'முகல்நுதி'க்காகச் சொல்லியிருந்தாலும், குடியரசின் துணைத் தலைவர் வகூட ஆட்சிக்கு வழங்கியிருக்கும் பாராட்டு பற்றியும், கழக அமைச்சர்கள் அளித்த விருந்தில் மத்திய அமைச்சர்கள் கலந்துகொண்டதனால் இங்கு உள்ள காங்கிரசார் நெஞ்சும் துணுக்குற்றிருப்பது பற்றியும் மேலிடத்துக்குத் தமது எண்ணத்தைச் சொல்லுவோவதாக அவர் கூறியிருக்கிறார்!

"ஆறு மாத கால ஆட்சியில் குடியரசுத் துணைத் தலைவர் எதைக் கண்டுவிட்டார்—பாராட்டு வழங்க" என்பது காங்கிரசார் வாதமாம்!

அதையே திருப்பிக் கேட்கலாமல்லவா?—'ஆறு மாத கால ஆட்சியில் குறைகள் மட்டும் எப்படிக் காணலாம்? குற்றங்கள் மட்டும் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? இன்னும் சற்று பொறுத்திருந்தால் என்ன?' என்று.

சரி; இப்படியும் கேட்கிறேன்—ஐந்து ஆண்டுக் காலம் பொறுத்திருந்து, போன வருடம்தானே. உங்கள் மத்திய ஆட்சியின் நிர்வாகம் பற்றிய 'சர்டிபிகேட்'டை, துணைத்தலைவர்கூட அல்ல—குடியரசின் தலைவரே—இராதாகிருஷ்ணனே வழங்கினார்?

காங்கிரசு நிர்வாகம் பற்றி இராதாகிருஷ்ணன் தெரிவித்த வருத்தத்தை ஜீரணித்துக்கொள்ள முடிகிறது! கழக நிர்வாகம் பற்றி வி.வி. கிரி வழங்கியிருக்கும் பாராட்டினை ஏற்றுக்கொள்ள முடியவில்லை!

வேடிக்கையான அரசியல் பிறவிகள்!

ஒரு மாநிலத்தில் நிர்வாகம் நன்றாக நடைபெறுகிறது என்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பெருமைப் பட்டுக்கொள்ளலாமே, காங்கிரசு மேலிடத்துக்கு ஏன் இந்தனை பதைபதைப்பு? அதைக் கண்டறிந்துவர ஒரு பார்வையாளரே ஏன்?

காங்கிரசல்லாத மாநிலத்தில் நல்ல ஆட்சி நடைபெறுகிறதென்றால், அது இந்தியாவுக்கே இழுக்கா?

"ஏதடா! இவன் கற்புடையவள் போலிருக்கிறதே!' என்று கேலி பேசும் காலம் வந்துவிடுமோ—என அஞ்சுகிறேன்" என்று நாவலரியர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது தான் நினைவுக்கு வருகிறது!

—எஸ். ஆர்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்.

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 19 (5—10—67) வியாழன்

காந்தீயம் வாழ வாய்ப்பு!

"பொய்மையும், கயமையும் கல்லாமையும், ஊதிப் பித்தும் வகுப்பு மாச்சரியமும் வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும் தூய்மையும் வாய்மையும், அஞ்சாமையும், பணியாற்றும் தன்மையும் நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திடவேண்டும். அதற்கே காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்."

"'காந்தி அடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார்—நம்முள் இருக்கிறார்—நம்முடன் கலந்துவிட்டார்' என்று எண்ணுதல் வேண்டும்; 'அவருடைய எண்ணங்கள் மடிந்துவிடவில்லை — அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம்' என்ற உறுதி பிறந்திட வேண்டும்."

காந்தி அடிகள் பிறந்த நன்னாளில்—அந்த நன்னாளை நினைவில் கொண்டு—நாம் கொண்டாடிவரும் விழாக்களில், அத்தகைய உறுதியை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்—வானொலியில் தாம் ஆற்றிய உரையில்—மேலே உள்ளவாறு கேடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

இவ்வாறு கூறிய அளவுடனும், முதலமைச்சர் மன நிறைவு பெற்றுவிடவில்லை.

இப்புனிதமான நாளில், காந்தி அடிகளைப் பற்றி நாம் நினைக்குந்தோறும், அவர், தம் வாழ்நாளில் புரிந்துள்ள அரும்பணிகள் பலபற்றி நாம் சிந்திக்குந்தோறும்—அவர் நமக்கு உருவாக்கித் தந்துள்ள சீரிய முறை பற்றி நாம் எண்ணிடுந்தோறும், நம்மில் ஒவ்வொருவருக்கும் ஏற்படக்கூடிய நல்லறிவும் நற்பண்பும், அந்த விழாவுடன் மறைந்திடுதல் கூடாது. அவவிழாவில் நமது உள்ளத்திலிளாரெதெழுகின்ற நல்லறிவும் நற்பண்பும், அதற்குப் பின்னர் நாம் ஈடுபாடு கொள்ளுகின்ற ஒவ்வொரு செயலிலும் ஒருங்கிணைந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தை, அறிஞர் அண்ணா அவர்கள்—வானொலி உரையில்—பின்வருமாறு வலியுறுத்திக் கூறியிருக்கின்றார் :—

"இன்று நடந்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும், நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல; அவர் வழி நடந்திட—அவர் காண விரும்பியதைக் கண்டிட—அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட—அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள் எவையாக்கிட!

"மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்!

"விழாக்களின் பலன், நமது செயலாலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது."

காந்தி பிறந்த நாள் விழாவில், நாம் ஒவ்வொருவரும் எத்தகைய நற்பண்பைப் பெறவேண்டும்—எத்தகைய உறுதியை மேற்கொள்ள வேண்டும் என்றெல்லாம், தூய்மையான உள்ளத்தோடு அறிஞர் அண்ணா அவர்கள் உருக்கமாகக் கூறியிருப்பதுடன், காந்தி அடிகள் காட்டிய பாதையில் செல்ல நாட்டு மக்கள் அனைவரையும் அன்புடன் அழைத்தும் உள்ளார்.

காந்தி அடிகளுக்குப் பிறந்த நாள் விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய கனிவுரை, அவருடைய இதயத் தூய்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

இதே நாளில்—இதே விழாவை, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அரும்பெரும் தலைவர்கள் கூடி, சென்னைக் கடற்கரையில் கொண்டாடி இருக்கின்றனர். அப்பெருந் தலைவர்களும் சில கருத்துக்களைக் கூறியுள்ளனர். அப்பெருந் தலைவர்களில் ஒருவரான முன்னாள் இந்திய அமைச்சர் அழகேசனார், காந்தி விழாவில் பேசிய பேச்சை, இதன்கீழ் குறிப்பிடுகிறோம்; இரண்டையும் ஒப்பு வைத்து நோக்கி, 'எவர் கூறியுள்ள கருத்து காந்தி அடிகளை நினைவூறுத்கக்கூடியது' என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் :—

"இப்போதெல்லாம் காந்தி ஜெயந்தி எப்போதென்றே தெரியவில்லை; எத்தனை 'காந்திகள்' என்பதும் தெரியவில்லை. தென்னாட்டு காந்தி—வடநாட்டு காந்தி என்றெல்லாம் கூறுகின்றார்கள்; எனவே, 'அக்டோபரில் காந்தி ஜெயந்தியா? அல்லது செப்டம்பரில் காந்தி ஜெயந்தியா?' என்பதற்குக்கூட வித்தியாசம் இல்லாமல் போய்விட்டது."

"தி.மு.க.-வினர் ஆட்சிக்கு வந்த பின்னர், கதர் இலாகாவையே மூடிவிடப் பார்த்தார்கள்; பின்னர் தான், 'கைத் தொழில்' என அவர்களுக்குப் புரிந்தது போலும்!

"இந்தியைப் படிப்பதற்கு காந்திஜிதான் வற்புறுத்தினார்; தி.மு.க.-வினர், இந்தி விரோதிகளாகிவிட்டார்கள். இதன் மூலம் இவர்கள், காந்திஜியின் அகிம்சைக்கு விரோதிகள். இவர்கள் எல்லாம் அரசியல் போலிகள். கொஞ்ச நாட்களுக்குத்தான் மக்களை ஏமாற்ற முடியும். இவற்றை எதிர்க்க நாம், 'சத்தியம்' என்ற மார்க்கத்தில் இருந்து விலகக்கூடாது."

'அச்சம் அகன்றிட—அறநெறி தழைத்திட உறுதிஏற்போம்'

முதலமைச்சர் அறிஞர் அண்ணா வேண்டுகோள்

'காந்தி அடிகள், இந்தியாவை, மாண்புமிகு நாடு ஆக்கிட விரும்பினார்! குற்றமற்ற—சுரண்டலற்ற—வகுப்புப் பேதமற்ற நாடாக ஆக்க விரும்பினார்! அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் காணும் நாடு, இன்று எத்தகைய நிலையில் இருக்கிறது?—வகுப்புக் கலவரங்கள், தீண்டாமைக் கொடுமை, வலியோர் சிலர் எளியோர்தமை வதைபுரியும் கொடுமை, கலாம் நெரியும் நகரங்கள், கவலை தரும்படி கிராமங்கள், அரசியற் சூதுகள், சமுதாயச் சதிகள் ஆகிய எல்லாம் நெளிகின்றன—'அடக்குவார் எவர் உளர்' என்று கொக்கரித்தபடி! சனநாயகம் நடக்கிறது—மொழி ஆதிக்கச் சண்டை ஓயவில்லை!

"காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்—கள்ளுக்கடை ஒழிப்பிலேகூட வெறறி காணுமல்—கடைகளைத் திறந்துவைக்கும் நிலையில்! 'காந்தி அடிகள் மகான்; அற்புதம் நடத்தினார்—மறைந்தார்' என்ற முறையிலே எண்ணம் கொண்டிருக்கின்றவரையில், இந்த நிலை மாறாது!

"'காந்தி அடிகள் மறையவில்லை; நம்முள் இருக்கிறார்—நம்முடன் கலந்துவிட்டார்' என்று எண்ணுதல் வேண்டும்! 'அவருடைய எண்ணங்கள் மறைந்திடவில்லை—அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம்' என்ற உறுதி பிறந்திட வேண்டும்! மறைந்த காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்க வேண்டும்! 'அவர் இறவாப் புகழ்பெற்றார்' என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது—'அவருடைய எண்ணங்களை ஏற்றுக்கொண்டவர்கள் நாங்கள்; எனவே, அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம்' என்ற உறுதிபெற!

"அவருடைய நாட்களில், அவர் குரல் கேட்டு அங்கிய அரசு விரண்டோடிற்று; ஆனால், ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன—பொய்யும் கயமையும், கல்லாமையும் இல்லாமையும், சாதிப் பித்தமும் வகுப்பு மாச்சரியமும் வெருண்டோட வேண்டும்! அதற்குத் தேவைப்படும் தூய்மையும் வாய்மையும், அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும் நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திட வேண்டும்! அதற்கே காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்!

"பரம ஏழைகளும், இது, தங்கள் நாடு என்று எண்ண வேண்டும்; அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று நினைக்க வேண்டும்; மக்களில் உயர்ந்த சாதி என்பதே இருக்கக்கூடாது; எல்லாச் சமுகத்தினரும் அன்னியோன்னியமாய் வாழ வேண்டும்; அத்தகைய இந்தியா உருவாகவே பாடுபடுவேன்"

'இதுவே உலக உத்தமர் காந்தி அடிகளின் இலட்சியம்' என்று பண்டித ஜவகர்லால் நேரு கூறியதை நினைவுபடுத்துகிறேன்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், காந்தியார் பிறந்த நாள் விழாவினையொட்டி வானொலியில் ஆற்றிய உரையில் தெளிவுற விளக்கினார். அவரது உரையின் முழுவிவரம் வருமாறு :—

"இன்று உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள்; நாடெங்கும் இந்நாள் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. அவரவர், தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும், அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும், பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணியுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

'அவர் ஓர் தூயவர்; நமது மார்க்கத்தின் மாசுதுடைத்திட வந்த மகான்' என்பாரும்—'அவர் ஓர் விரதமே வீரர்; நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சாநெஞ்சினர்' என்பாரும்—'அவர் ஓர் வேதாந்தி; பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர்' என்பாரும்—'அவர் ஒரு சமதர்மவாதி; ஏழைப் பங்காளர்; ஏழைகள் புதுவாழ்வு பெற்று வழிவகுத்தவர்' என்பாரும்—'அவர் கிராம இராஜ்யம்' அமைத்திட முனைந்தவர்' என்பாரும்—இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர், பல்வேறு வகையினர் உளர்.

இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டிய ஒரு பிரச்சினையாகும்; காரணம், 'ஒரு தனி மனிதர்' என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர், காலத்தின் சின்னம்! எழுச்சியின் அடையாளம்! மறுமலர்ச்சியின் உருவகம்!

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தியடைய விரும்பினால், அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும்; ஆனால், அரசியல் துறையிலேமட்டும் அரும்பெரும் வெற்றிபெறு, மற்றத் துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்லர்: எல்லாத் துறைகளிலும் அவர் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்! எல்லாத் துறையினரும், 'எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார்; எமக்காகவே பணிபுரிந்தார்' என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன!

அவருடைய பிறந்த நாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே! அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறையுக்கு அல்ல—எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்தற்கு—ஒரு புதிய பொலிவை—வலிவைக் கொடுத்தவர்!

ஒரு நாட்டின் முன்னேற்றம், ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று; எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும்—அவைகளின் ஒட்டு மொத்தத்தைக்கொண்டே, 'அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா' என்ற கணக்குப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது; 'ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கும்' என்றும் கூறிவிட

(8-ம் பக்கம் பார்க்க)

நடைபெற்றிருப்பதோ, காந்தி நினைவு நாள் விழா—பங்கு கொண்டிருப்பவரோ, முன்னாள் இந்திய அமைச்சர்—பேசியிருக்கக் கேண்டியதோ, காந்தியை கோட்பாடு குறித்து—ஆனால், அழகேசனார் பேசித் தீர்த்திருப்பதோ, தோதல் தோலவி—எதிருக்கின்ற ஏமாற்றம் பற்றி!

அப்புனிதர் புகழ்பாடக் கூட்டப்பட்ட இந்த ஒரு கூட்டத்திலாவது—இந்த ஒரு நல்ல நாளிலாவது, தமக்கு ஏற்பட்ட தோற்தல் தோலவிபற்றிய நினைப்பையும், அத்தோல்வியைத் தந்த கழகத்தைத் தூற்றிவருகின்ற சிறுமதியையும், அழகேசனார் தொலைத்துத் தலைமுழுகி இருக்கக்கூடாதா?

காந்தியாரின் உயர்ந்த கோட்பாடுகளுக்கு ஊறு தேடியவர்கள்—தேடிக்கொண்டிருப்பவர்கள்—அரசியல் இலாபத்திற்காக அவர் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டிருக்கின்ற அழகேசனார் அவர்களைப் போன்றவர்களே ஆவர்; இதனால், காந்தி அடிகளின் விழுமிய இலட்சியங்கள், இனியும் ஒளிவிடாப் பிரகாசிக்க, அழகேசனார் போன்றவர்களிடமிருந்து காந்தீயத்தை விடுவித்தல் வேண்டும்; அப்பொழுதுதான், காந்தீயம் இந்த நாட்டில் ஏறுநடை போடும் நல்வாய்ப்பு கிடும்.

—கா. க.

சென்னை மாநகராட்சி வட்டங்கள்

120-ஆகப் பிரிக்கப்படும்

சென்னை, செப். 30—சென்னை மாநகராட்சிச் சட்டப்படி, இனி மாநகராட்சி மன்ற வட்டங்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்த்தப்படும்.

இதுவரை 100 வட்டங்களே இருந்துவந்தன.

சென்னை நகரில் ஏற்கனவே இருந்த 10 சட்டமன்றத் தொகுதிகளும், 12 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டன.

ஒவ்வொரு தொகுதியும் 10 மாநகராட்சி வட்டங்களாகப் பிரிக்கப்படும்.

'தொழில் வளர்ச்சி எங்கள் நோக்கம்'

'அனைத்துநாட்டுப் பொருட்காட்சிக்கு உதவ அரசு தயங்காது'

கால்கோள் விழாவில் அறிஞர் அண்ணா உறுதிமொழி

சென்னை, அக். 3—

அடுத்த ஆண்டு சென்னையில் நடைபெறவிருக்கும் அனைத்து நாட்டுத் தொழில — வணிகப் பொருட்காட்சியில் இடம்பெற விருக்கும் தமிழக அரசின் அரங்கப் புக்கான கால்கோள் விழா இன்று மாலை நடைபெற்றது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கால்கோள் விழா ஆற்றினார்கள்.

பொருட்காட்சி அமைப்புக் குழுவின் தலைவர் திரு. ஹாஜா ஷெரீப் அனைவரையும் வரவேற்றார்.

சென்னை மேயர் இரா. சம்பந்தமும் கலந்துகொண்டார்.

அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இன்னும் சில தினங்களில் நடக்க விருக்கும் இப்பொருட்காட்சியில் பங்கேற்கும் நாடுகளையும் ஏனைய நிறுவனங்களையும் எண்ணிப் பார்க்கும்போது இது ஒரு மிகப் பெரிய முயற்சி என்பது விளங்கும்.

இத்தகையதொரு பெரிய முயற்சிக்குத் தமிழக அரசு உரிய உதவி வழங்கிடத் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நிலத்தைப் பண்படுத்தவும், செம்மைப்படுத்தவும் மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசு செலவிட்டுள்ளது. இந்தப் பொருட்காட்சியில் மாநில அரசு கொண்டுள்ள அக்கறைக்கு இதுவே ஓர் எடுத்துக்காட்டாகும்.

மத்திய அரசின் உதவியையும் கேட்டிருக்கிறேன். அதுவும் கிட்டும் என்று நம்புகிறேன். மிகத் துரிதமாக வேலைகள் நடந்தால்தான் குறிப்பிட்ட காலத்தில் பொருட்காட்சியைத் திறக்க முடியும். அதற்குரிய முறையில் நண்பர்கள் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்.

பொருட்காட்சிக் குழுவில் உள்ள திரு. ஹாஜா ஷெரீப் போன்ற நண்பர்களுக்குத் தமிழக அரசு தொடர்ந்து உதவுமோ என்ற ஐயப்பாடு எழலாம்.

தமிழக அரசில் கட்சி மாறியுள்ளதே தவிர, தமிழாநாடு தொழில் வளம் பெற வேண்டும் என்ற நோக்கம் மாறவில்லை. திட்டமிட்ட வகையில் தொழில்கள் வளர வேண்டும் என்றே விரும்புகிறோம்.

தொழில — வணிகப் பெருமக்கள் இந்த முயற்சியில் நல்ல ஒத்துழைப்பை நல்குவார்கள் என நம்புகிறோம்.

ஏற்கனவே நமக்கு உதவிய நாடுகள் பல பொருட்காட்சியில் பங்கு கொள்ள இருக்கின்றன. தங்கள் உதவியால் இந்நாட்டின் வளர்ச்சியில் இன்னும் வேகம் அதிகரிக்கும் என்று அவர்கள் உணர்வுற்று, நாடுகளிடையே நேரழமை வளரவும் இப்பொருட்காட்சி பயன்படும் என்று மகிழ்ச்சியோடு இக்கால்கோள் விழா விண்ச் செயதுவைக்கிறேன்."

ஹாஜா ஷெரீப்

திரு. ஹாஜா ஷெரீப் தமது வரவேற்புரையில் கூறியதாவது :—

"பொருட்காட்சி நடைபெறும் இந்த இடத்திற்கு முதன் முறையாக வந்திருக்கும் முதலமைச்சரை வரவேற்கிறேன். அவர் வருகையால் பொருட்காட்சி அமைப்பு வேலைகட்குப் புதிய வேகம் பிறக்கும்.

தமிழக அரசினர் அளித்துவரும் இந்த உதவியும் ஊக்கமும் எங்களுக்கு பேருதவியாக விளங்குகிறது.

முதலமைச்சர் அவர்கள் வரலாற்று நிகழ்ச்சிகள் காட்டும் தத்துவத்தையொட்டி அரசைத் தட்டுத்தடங்கலின்றி இணக்கமான முறையில் வழிநடத்திச் செல்கிறார். அவர்களது தொடர்ந்த நலனுதவியை நாங்கள் நாடுகிறோம்.

இப்பொருட்காட்சி ஆசியாவிலேயே பெரியதாக விளங்கும். இருபது வெளிநாடுகளும், 16 மாநில அரசுகளும் மற்றும் பல தனியார் துறை நிறுவனங்களும் பங்குகொள்ள விருக்கின்றன.

இதுவரை, டில்லியிலேதான் இத்தகைய பொருட்காட்சிகள் நடப்பது வழக்கம்; சென்னையில் நடப்பது இதுதான் முதல் முறையாகும்.

உலகப் பொருட்காட்சிக்கு மத்திய அரசு உதவி

அண்ணா நடவடிக்கை

சென்னை, அக். 4—

"சென்னையில் நடக்கவிருக்கும் அனைத்து நாட்டுப் பொருட்காட்சியையொட்டி, நிலத்தை சமப்படுத்தும் வேலை—குடிநீர் வசதி செய்தல்—மின்வசதிகள் ஏற்படுதல் போன்ற பணிகளுக்காக மத்திய அரசு நிதியுதவி அளித்திட வேண்டும் என்ற தமிழக முதலமைச்சரின் கோரிக்கைக்கு மத்திய அரசு இசையும் என்றே தோன்றுகிறது; இது குறித்து நான் அமைச்சர் தினேஷ் சிங்கிடம் பேசினேன்.

"ஏற்கனவே ரூ. 75 இலட்சம் வரை மத்திய அரசிடமிருந்து கடனாகப் பெற்று இதற்கெனச் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ. கோடி தேவை என்று கேட்டுக்கிறோம்; 'உதவப்படும்' என்று தினேஷ் சிங் உறுதியளித்துள்ளார்; நானும் நம்பிக்கையோடு இருக்கிறேன்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு தெரிவித்தார்.

சொத்து வரி மதிப்பீடு மாற்றம்

சில நகராட்சிகளில் ஒத்திவைப்பு

சென்னை, அக். 4—

நகராட்சிகள் வருவிக்கும் சொத்து வரி சம்பந்தப்பட்ட மதிப்பீட்டில் மாற்றம் செய்வது சாதாரணமாக ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகிறது.

எனினும், நகராட்சி மன்றங்களும் பொதுமக்களும் கேட்டுக் கொண்டதன்பேரில், சிலவற்றில் அவவாறு மாற்றியமைப்பதை ஒத்திவைக்க அரசு இசைந்துள்ளது.

பின்வரும் நகராட்சிகளில், அக்டோபர் முதல் தேதியன்று சொத்து வரி சம்பந்தமாகச் செய்ய வேண்டிய மாற்றத்தை அரசு மேலும் ஒத்திவைத்துள்ளது :—

கோயம்புத்தூர்; சேலம்; பொள்ளாச்சி; வேலூர்; திண்டுக்கல்; திருப்பூர்; கரூர்; குடியாத்தம்; நீடாமங்கலம்; மேட்டூர் நகரிய; குடி; மன்னார்குடி; சிவகாசி; ஆரணி; தாராபுரம்; திருப்பத்தூர்; திருச்சிராப்பள்ளி; விருதுநகர்; குனனூர்; போடிநாய்க்கனூர்; தேவகோட்டை; வாலாசாபேட்டை; தம்பம்.

தலைமை நீதிமன்றத்தில் நீக்ரோ நீதிபதி!

வர்ஷிங்டன், அக். 5—

அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைமை நீதிமன்றத்தில் நீக்ரோ இனத்தைச் சேர்ந்த மார்ஷல் என்பவர் நீதிபதியாகப் பதவியேற்றார்.

இப்பதவியேற்பு விழா குடியரசுத் தலைவர் ஜான்சன் முன்னிலையில் நடைபெற்றது.

செயலற்ற போக்குக்குச் சமாதானம் கூடாது!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முடியாது; அந்தக் கணக்கு, இங்நாட்டுக்கு, காந்தியடிகளின் வடிவத்தோடு கிடைத்தது! எனவே தான், இங்நாள், ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமன்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த 'நற்காலம்' என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது!

மகான்கள், மாவீரர்கள் ஆகியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு, நம் நாடு! புகழ் பாடுவதில—பூசைகள் நடாத்துவதில் வல்லவர்கள் நாம்! ஆனால், யாருக்காகத் திருநாள் நடத்துகிறோமோ—எவருடைய திருநாமத்தை பூஜிக்கிறோமோ—எவருடைய ஆற்றல் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோமோ—அவர்கள் காட்டிய நெறியிலே நடக்கிறோமா என்றால், 'இல்லை' என்ற பதிலையே ஏக்கத்துடன் பெற முடிகிறது!

இன்று, இராட்டை சுழலுகிறது—நாளை எத்தனை பேர்?

இன்று, சேரிகளிலே சென்று சேவை செய்கிறோம் —நாளை?

இன்று, வகுப்பு ஒற்றுமை பற்றிப் பேசுகிறோம், எழுச்சியுடன்—நாளை?

இன்று, 'கிராமங்களிலேதான் நாட்டின் இதயம் இருக்கிறது' என்று உணர்ந்து பேசுகிறோம்' ஆனால், மறுநாள்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு—நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும்—அதற்கே இந்நாள்! அவர் புகழ பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல; அவர் வழி நடந்திட—அவர் காண விரும்பியதைக் கண்டிட—அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட—அவர் ஊட்டிய உணர்ச்சிகள் உயிருள்ளவையாக்கிட!

மாலையின் மாண்பு, மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழிக்கண்ணின் பலன், நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது!,

அவருடைய பிறந்த நாள், நாமெல்லாம் நற்கருத்தும் சரியு செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும்! அதற்கான முறையில் நாம் நடந்துகொள்கின்றோமா என்ற கேள்வியை எழுப்புகிறேன்— நம்முன் உள்ள மிகப் பெரிய கேள்வி அது!

'மகான்களையும், மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம்' என்றேன்; அவர்கள் புரிந்த அற்புதங்களை — மகிமைகளை — காதைகளாய், கவிதைகளாய் ஆக்கி மகிழ்வதிலும் நாம் மிகவும் வல்லவர்கள்! 'அவர், கடலை அடக்கினார்—காற்றை விரட்டினார்—கருநாகத்தை மாலையாக அணிந்தார்; கந்த மூலமே அவருக்கு உணவு; தொட்டார்—பட்டமரம் துளிர்த்தது; பார்த்தார்—மடிந்த தாயாங்கள்; குருடன் பார்வை பெற்றான்—இப்படிப்பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு, நம் நாடு!

இந்த மகிமைகளையும் அற்புதங்களையும் வியந்து பேசவது, பிறகு எதற்குப் பயன்படுகிறது?— 'அவர் மகான் - ஆகவே அப்படிச் செய்தார்; நாம் சாமான்யர்கள்; நம்மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய!' என்று பேசி, நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக்கொள்ளவே அது பெரிதும் பயன்படுகிறது!

அந்த முறையிலே காந்திடிகளின் பிறந்த நாளை நடத்துபவர்களாக நாம் இருந்துவிடக்கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன்.

அவரை, 'அவதார புருஷர்களிலே ஒருவர்; பூஜைக்கு உரியவர்' என்று—அவர் பிறந்த நாளன்று அவர் பற்றிய மகிமையை - அற்புதத்தைப் பேசவது மட்டுமே போதாம் என்று இருந்திடாமல், அவர் காண விரும்பிய சமுதாயம்— அவர் எடுத்துக்காட்டிய இலட்சியம்—அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றினை— நிகழவிடை கொண்டு, அதற்கான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டிடினுமில்லை; ஆனால், ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேசவைத்தார்— உரிமை முழக்கமிடச் செய்தார்—படை பல வந்திடினும் — தடை பல நேரிடினும் அஞ்சாதீர்' என்றுரைத்தார்!

'அஞ்சி அஞ்சிச் சாவார்; அவர் அஞ்சாத பொருளிலே அவனியிலே' என்று துக்கம் தோய்ந்த குரலிலே' பாடினாரே பாரதியார்—அந்த அச்சத்தைத் துடைத்தார்! ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதோரின் ஓர் அணி வகுப்பை நிறுத்திக் காட்டினார்! சிட்டுக் குருவிகளுக்கு வலுநரை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்! 'நம்மால் என்ன ஆகும்' என்ற ஏக்கத்தை விரட்டினார்! 'நாமிருக்கும் நாடு நமது என்பதறிவோம்' என்ற உறுதி எழச் செய்தார்! போர் முகம் அமைத்து அல்ல — எளிய குடில் அமைத்து—வெட்டச் சொல்லி அல்ல — வெட்டுண்டவர் போக ஏன்யோர் அறப் போராப் பாதை நடத்திடுக' என்றுரைத்து—ஆக்திறம் ஊட்டி அல்ல — அன்பின் ஊட்டி!

'மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கொண்டவர் அவர்' என்று கதை கூறுவர்—காந்திடிகள் நடாத்திய அற்புதத்தைப் பற்றி!

நாம் நமது கண்களால் கண்டோம்—அந்த 'அரை ஆடை' மனிதர், கோர்டானுகோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட, 'அற்புதம்' வேறு என்ன இருக்க முடியும்?

'இவரா இந்தியாவின் தலைவர்?' என்று எள்ளி நகையாடியவர்கள், அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு, 'இவரன்றோ தலைவர்' என்று புகழ்ந்தனர்! 'இங்நாட்டுக்கு மட்டுமல்ல; அடிமைத் தனை உடைத்திட விரும்பும் எங்நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது' என்று, இன்று ஆய்வாளர்கள் பலர் கூறுகின்றனர்!

'இந்தியா என்றோரு நாடுண்டு—அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு; பொன்னும்—பொருளும் மிக உண்டு—போக்கறியாதார் நிரம்ப உண்டு' என்ற அளவில், பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது :

பிறகு படிப்படியாக இந்தியா, பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது; அப்போது, 'இந்தியா என்றோர் நாடுண்டு; அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு' என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது!

விடுவெள்ளி தோன்றுவதுபோல், திலகர் காலத்திலே விடுதலைக்கு முழக்கி செய்யப்பட்டது என்றபோதிலும், காந்தி அடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, 'இந்தியா என்றோர் நாடுண்டு; அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு' என்று உலகம் அறிந்துகொள்ள முடிந்தது!

காந்தி அடிகளின் புகழொளி முலமே உலகம், இந்தியாவைக் கண்டுவந்தது!

தன்னலமற்ற — விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை, நாட்டிலே காந்தி அடிகளால்தான் உண்டாக்க முடிந்தது! அதற்கு முன்பெல்லாம், விடுதலை கோரி, மனுச் செய்யும் தோரணையிலேயே நாடு இருந்தது!

அவருடைய உருவமோ—உடலமைப்போ—பேச்சோ—நடவடிக்கையோ—இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை; ஆனால், அவரால், இராணுவங்களாலே எரிந்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது!

அவருடைய பொதுப் பணியிலே ஒரு கடுமையான சொல—ஒரு கோமையற்ற செயல—ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை!

அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கில் உண்டாக்கக் கூடிய அளவுக்குப் பரப்பிற்று!

அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர்! அவர் மண் குடிசையிலே தங்கினால், அது, 'மதிப்பளிக்கக்கூடியது' என்று மன்னர்கள் எண்ணினர்!

'சுயராஜ்யம்! பெற்றளித்துவிட்டால் போதும்— என்று அவர் கருதவுமில்லை -- கூறவுமில்லை! 'நாடும் மக்களும் எப்படி இருந்திட வேண்டும்' என்பதனை அவர் கருமலுமில்லை!

"சுயராஜ்யம், ஏர் இலட்சியத்துக்கு வாய்ப்பு' என்றோ அவர் கருதினர்! ஒரு நாட்டுக் காதையிலே பொன் ஏடு அது—ஆனால், கடைசி ஏடு அல்ல' என்பதை வலியுறுத்தினர்!

"நாடும் மக்களும் எந்த நிலை பெறவேண்டுமோ, அதற்கு, அடிமைத்தனம் தடையாக இருக்கிறது; அகவே, அதை எந்த விலை கொடுத்தேனும் அகற்றியாக வேண்டும்" என்றோ அவர் கூறினர்!

அடிமைத்தனை அகற்றப்பட்டது! ஆனால், 'எந்த நிலையிலே நாடும் மக்களும் இருந்திட வேண்டும்' என்று அவர் கருதினரோ, அந்த நிலையை ஏற்படுத்திவிட்டோமா? 'இல்லை' என்பதைச் சொல்லக் கூச்சப்படத் தேவை இல்லை! 'ஏற்படுத்தியாக வேண்டும்' என்ற உறுதியைப் பெற்றிட, இங்நாள், உணர்ச்சி அளித்திட வேண்டும்!

அச்சம் அகற்றினர்—ஆங்கில அரசிடம் கொண்டிருந்த அச்சத்தை; ஆனால், அச்சம் பிற துறைகளிலே இருந்து அகலாததா? இல்லையே! சமுதாயத்தில், 'மேலோர்—கீழோர், செல்வர்—வறியர், எளியோர்—வலியோர்' என இருக்கமுடியும், அச்சம் எங்ஙனம் அகலும்?

பசி அச்சுறுத்துகிறது: பற்றுக்குறை பயமுட்டுகிறது! சூரோத உணர்ச்சி விரட்டுகிறது! அச்சம் அகலவில்லை!

அச்சம் அகலவேண்டும்—அறநெறி தழைக்க வேண்டும்—அண்ணலின் பிறந்த நாள் விழா நடாத்திடும்போது, இதற்கான உறுதி பெற்றிட வேண்டும்!

ஒருபுறம் செல்வம்—அதனைச் சூழ வறுமை! ஒருபுறம் பளபளப்பான பட்டினங்கள்—கோடியிலே வறுமை நெளியும் சேரிப்புங்கள்! ஒருபுறம் தொழிற்கூடங்கள்—மற்றொருபுறம் வேலையில்லாதார் கூட்டம்! ஒருபுறம் அறநெறி நிலையங்கள்—பிறிதோர் புறம் சுரண்டல்காரர்கள் —

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் கருணாநிதி உடல் நிலை

சென்னை, அக். 5—கார் விபத்தில் சிக்கி, சென்னை தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு எழுந்து நடக்கத் துவங்கியிருக்கிறார். ஆகவே, சிகிச்சை முடிந்து நாளை (வெள்ளிக்கிழமை) இல்லம் திரும்புவார்.

மதுரை எஸ். முத்து

மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். முத்துவின் உடல் நிலையும் தேறிவருகிறது.

மருத்துவர்கள் ஆலோசனைப்படி அவர், இன்னும் சில நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவார்.

'வாக்காளர்களை அமைச்சர்கள் மதிக்க வேண்டும்'

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அமைச்சர்கள் பிரச்சாரம் பற்றி அண்ணா

சென்னை, அக். 4—

அண்ணா அவர்கள் முதலமைச்சரானதால் ஏற்பட்ட காலியான தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் தி.மு. கழக வேட்பாளராக 'முரசொலி' ஆசிரியர் மாறன் எம்.ஏ. போட்டியிடுவார்.

இன்று தமது வாராந்தரச் செய்தியாளர் கூட்டத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் இந்த அறிவிப்பைத் தந்தபோது, 'பிற கட்சிகளின் ஆதரவு தி. மு. கழக வேட்பாளருக்கு இருக்குமா?' என்று செய்தியாளர்கள் கேட்டார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள், 'பொதுத் தேர்தலில் கழகத்தை ஆதரித்த கட்டணிக் கட்சிகள் அனைத்தும் இப்போதும் கழகத்தை ஆதரிக்கும்' என்றார்.

"அமைச்சர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொள்வார்களா?" எனக் கேட்டதற்கு, 'தவிர்பட்ட முறையில் சிலர் எதிர்த்திருந்தபோதிலும், தி. மு. கழகம், கட்சிரீதியாக எதிர்ப்பு தெரிவித்ததில்லை; காங்கிரசத் தலைவர் காமராசர் மாநகராட்சித் தேர்தலில் கடத்தெருத் தெருவாகச் சென்று ஆதரவு தேடினார்; அமைச்சர்கள் வாக்காளர்கள் மதிக்க வேண்டும்—அவ்வளவுதான்' என்றார் அண்ணா.

பிரச்சாரம் சீராக அமைவதன் அவசியம்

கேள்வி:—"அரசியல் கட்சிகளுக்கிடையேயான போட்டி ச்சச்சரவுகளுங்கெல்லாம் ஐந்தாண்டுக் காலம் ஓய்வளிப்போம் என்பதாகத் தாங்கள் கூறியிருக்கிறீர்களே ?"

அண்ணா:—"ஆம்; நான் சொன்னதென்னவென்றால், அரசியல் கட்சிகளின் முக்கியத் தலைவர்களெல்லாம் கூடி அமர்ந்து நாகரிக அரசியலை 'நடத்த வழி வகுத்துக் கொள்ள வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாக இருந்தது; இதுவரை அதற்குப் பதில் கிடைக்கவில்லை; நான் என் வழியில் அம்முயற்சியைத் தொடருகிறேன்.

கேள்வி;—"முயற்சியைத் தொடருவதென்றால் ?"

அண்ணா:—"என்னால் பின்புறம் என் கழகத் தோழர்களை நாகரிக அரசியல் நடத்திடும்படி நான் கோருவேன்."

கேள்வி:—"நாகரிக அரசியல் என்று தாங்கள் குறிப்பிடுவதற்குச் சற்று விளக்கம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளலாமே?"

அண்ணா:—"பேச்சிலும் எழுத்திலும் கண்ணியத்தைக் கடைப்பிடித்தல்; மோதலையும் தெருச்சண்டைகளையும் தவிர்த்தல்; பிரச்சாரத்தைச் சீராக அமைத்துக்கொள்ள வேண்டியதன அவசியத்தை உணருதல்."

நடக்க இருப்பவை

6--10--67

கஸ்தூரிபாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. ஏ. சாமிநாதன், சி. டி. தண்டபாணி, சட்டமன்ற உறுப்பினர்கள் கே. என். சாமிநாதன், மு. கண்ணப்பன் ஆகியோருக்குப் பாராட்டு; தலைவர்: சி. முத்துச்சாமி; பேசுவோர்: க. ஈசுவரமூர்த்தி, மு. பழனிச்சாமி, சி. வேலுச்சாமி.

7--10--67

செங்கற்பட்டு

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பெரிய செட்டித் தெருவில்; தலைவர்: செ. ஏ. பலராமன்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, கே. எம். கோ. விசுவநாதம் எம்.எல்.ஏ., செ. ஏ. ஆர். அன்சர் எம்.சி., வ. பசுபதி எம்.சி., கோ. ஆலாலசுந்தரம், சி. எம். தட்சணமூர்த்தி.

கலை நிகழ்ச்சிகள்

வில்லியனூர் தி. மு. க. சார்பில் 7—10—67 மாலை 6-30 மணிக்கு கிழக்கு சன்னதி வீதியில், மா. வேணுகோபால் தலைமையில், சிவகங்கை தேவுராசனின் பஜனை கலைநிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 22-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில் 6—10—67 இரவு 7-மணிக்கு மன்னப்பா முதலித் தெருவில் (சர். தியாகராயர் உயர் நிலைப் பள்ளி அருகில்) ம.மோகன ரங்கம் எம்.சி. தலைமையில், தென்னகப் பல்கலைக் குழுவினர் அளிக்கும் குமார் விசயாவின் 'ஆளுகின்றார் அண்ணா' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தீவிபத்து நிவாரண நிதி

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பேசுகையில் ஒரு இலட்சரூபாய் மிகக் குறைவானது; நாங்கள் எதிர்பார்த்ததைவிடக் 'குறைவான தொகை' என்று குறிப்பிட்டிட்டார்; ஆனால் என்னப் பொறுத்தவரையில், இந்தத் தொகை, நான் எதிர்பார்த்ததைவிட அதிகம்.

இதற்கு முன்னும் கலைஞர்கள் உதவி அளித்திருக்கிறார்கள் என்றாலும், இந்த உதவி சமுதாயத்திற்குப் பெரிதும் உதவக்கூடிய உதவி!

இதுவரை அளித்துள்ள எல்லா உதவிகளையும்விட இந்த உதவி, எல்லாவிதத்திலும் உயர்ந்தது—சிகரம் போன்றது:

கலைஞர்களுக்கும்—தமிழக அரசுக்கும் இருக்கும் நேசப்பாங்கும் உறவும் மென்மேலும் வளரும் வகையில் இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது.

இதுவரை கலைஞர்கள், அரசுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்தனர். இனி, கலைஞர்களுக்கு அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவ்வளவு உதவிகளையும் ஆலோசித்து இயன்றவற்றைச் செய்ய முயலும்."

நிலவில் இறங்குவதில் ஆபத்து இல்லை!

சர்வேயர்—5 வானவெளிக் கப்பல் எடுத்தனுப்பிய லெவிஎன் படங்களிலிருந்து, நிலவில் இறங்கக்கூடிய வானவெளி வீரர்களுக்குப் புழுதியில் புதையும் ஆபத்தோ வானவெளிக் கப்பல் இறங்குவதால் பெரும் குழி ஏற்படும் ஆபத்தோ இருக்காது என்று தெரியவருகிறது.

பாலர் அரங்கம்

அக்டோபர் 6, 7, 8 தேதிகளில் மாலை 4 மணிக்கு

சாரணர் முகாம்

(குழந்தைகள் திரைப்படச் சங்கம் தயாரித்தது)

கட்டணம் வழக்கம்போல்

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

அக். 6: காலை 8 மணி: பவானி; 8-30 மணி: ஆண்டிபூர், பர்கூர், செல்லம்பாளையம், சாலவாடி, இராமரவாரம் ஆகிய ஊர்களிலுள்ள கான்துறை நிலக் கிடங்கு பார்வையிடல்; 11 மணி: வேலம்பட்டி—கான்துறை நிலத்தைப் பார்வையிடல்.

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

அக். 6: காலை 10 மணி: தளவாய்புரம் ஊராட்சி வரவேற்பு; அறிஞர் அண்ணா படத் திறப்பு; 11-30 மணி: இராசசாரணியம் கைத்தறி சங்கங்கள், தி.மு.க. ஆகியவை வரவேற்பு; மாலை 5-30 மணி: திருவிலிப்புத்தூர் பொதுமக்கள் வரவேற்பு; இரவு 7-30 மணி: சிவகாசி பொதுமக்கள் வரவேற்பு;

அக். 7; காலை 9-30 மணி: காந்திகிராமம்; மாலை 4-30 மணி: திருப்பரசேத்தி—சங்கு இயக்கி வைத்தல்; 6 மணி: விருதுநகர் நகராட்சி வரவேற்பு; பொதுக் கூட்டம்;

அக். 8: திருப்பத்தூர் தொகுதியில் சுற்றுப்பயணம்;

அக். 9: காலை: கும்பகோணம்—பல நிகழ்ச்சிகளில் பங்கேற்பு; மாலை: மாயூரம்—பல நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

க. அறிவழகன்

எம்.ஏ., எம்.எல்.சி.

சுற்றுப்பயணம்

அக். 6: பெண்ணாடம்; 7: பொள்ளாச்சி வட்டம்; 8: பொள்ளாச்சி நகரம்; 9: ஈரோடு; 10: நுகர்வோர் மன்ற ஆலோசனைக் கூட்டம்; 11: சென்னை 22-வது வட்டம்; 12: சென்னை 13-வது வட்டம்; 13: சென்னை முதல் வட்டம்; 14, 15: கழகப் பொதுக்குழு.

சொ. கோவிந்தராசன்

எம். எல். ஏ. சுற்றுப்பயணம்

அக். 6, 7: குற்றாலம்—அரிசனநலக் குழு; 8: தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கப் பொதுக்குழு; 9: மேங்காடு, எம். ரெட்டியபட்டி; 10: குமாரம்; 16: மதுரை—கருத்தரங்கு; 19: ஏ. மேலப்பட்டி.

மணிவண்ணன் குழுவினர்

கலைநிகழ்ச்சிகள்

அக். 6: சீராண்டுகுளம்; 7: தி. சேரி; 9, 10: தம்புரி மாவட்டம்; 14: வண்டிபேட்டையபுதூர்; 18: வாழமங்கலம்.

முசிறித் தொகுதி

வாக்காளர்க்கு:

"டி. புத்தூரிலுள்ள எனது இல்லத்தில் (சட்டமன்றக் கூட்டக் காலம் தவிர்த்த மற்ற நாட்களில்) எல்லா ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் என்னைச் சந்தித்து, முசிறித் தொகுதி வாக்காளர்ப் பெருமக்கள் தங்கள் கோரிக்கைகளைத் தெரியப்படுத்தலாம்" என்று திரு. முத்துச் செல்வன் எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

மறைவு

சென்னை 20-வது வட்ட தி.மு.க. பொருளாளரும் நாவரசு கலைக் கூடத்தின் உரிமையாளருமான தோழர் பெ.து. மூர்த்தி (வயது 50) இயற்கையெய்தினார் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

தென் சென்னை வாக்காளர் பட்டியல்

உங்கள் பெயர் இருக்கிறதா?— இல்லையேல் உடன் ஆவன செய்க!

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல்கள், செப்டம்பர் 25-ம் நாள் இறுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இறுதிப் பட்டியல்களை, வாக்காளர் பதிவு அதிகாரி (மாநகராட்சி வருவாய் அதிகாரி) அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வையிடலாம்.

தொகுதி முழுவதற்குமான பட்டியல்களின் நகல்கள் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன.

வாக்காளர் பட்டியல்கள் பற்றிய முழு விவரங்களும் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் கிடைக்கும்.

வாக்காளர் பட்டியல்களில், வாக்காளர் பற்றிய விவரங்கள் சரியாக இருக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளன; எனினும், சிலவற்றில் தவறுகள் ஏற்பட்டிருக்க இடமுண்டு.

இப்படித் தவறு காணும் வாக்காளர்கள் அவற்றைத் திருத்தக் கோரி, 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 22-ன் கீழ், நமூனா 8-ல் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்; அவர் விசாரித்து, வேண்டிய திருத்தங்கள் செய்வார்.

ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு நபர், அதே தொகுதியில் வேறொரு இடத்திற்குத் தன்னுடைய பெயரை மாற்றக் கோரியும் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம்; இதற்கென்று நிர்ணய நமூனா எதுவும் இல்லை; வாக்காளர் பதிவு அதிகாரி விசாரித்த பிறகு திருத்தம் செய்வார்.

பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு நபரின் பெயரை ஆட்சேபித்தும் நமூனா 7-ல் விண்ணப்பிக்கலாம். பிரிவு 22-ன் கீழ் மாற்றி—திருத்த—அல்லது நீக்கக் கோரும் விண்ணப்பங்கள் வாக்காளர் பதிவு அதிகாரிக்குத்தான் அனுப்பப்பட வேண்டும்.

தகுதி பெற்ற வாக்காளரின் பெயர் பட்டியலில் இடம் பெறாமல் இருந்தால், சட்டப் பிரிவு 23-ன் கீழ் அவர் பெயரைச் சேர்க்கமுடியும். இதற்கு நமூனா 6-ல் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

1967 சனவரி முதல் தேதியன்று 21 வயது நிறைந்தவர்கள்தான் வாக்காளராக முடியும்.

சட்டப் பிரிவு 22, 23 ஆகியவற்றின்கீழ் வாக்காளர் பதிவு அதிகாரி பிறப்பிக்கும் உத்தரவை எதிர்த்து, சென்னை கோட்டையிலுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

பெயர்களை ஒரே தொகுதியில் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றக் கோரும் விண்ணப்பங்கள் தவிர, மற்ற எல்லா விண்ணப்பங்களையும் நிர்ணய நமூனாக்களில் அனுப்ப வேண்டும்.

வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் அச்சிட்ட நமூனாக்கள் கிடைக்கும்.

அச்சிட்ட நமூனாக்களில்தான் விண்ணப்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை; நிர்ணய வடிவத்தில் டைப் செய்யப்பட்ட—சைக்லோஸ்டைல் செய்யப்பட்ட—அல்லது கையால் எழுதப்பட்ட நமூனாக்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

வாக்காளர் பதிவு அதிகாரிக்கு அனுப்பும் விண்ணப்பத்திற்கு 50 காசும் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பும் விண்ணப்பத்திற்கு ரூ. 3-ம் கட்டணம் மாகும்.

விண்ணப்பத்தில் இந்தத் தொகைகளுக்கு, நான்-ஜுடீஷியல் முத்திரைகளை ஒட்டி அனுப்ப வேண்டும். அவை கிடைக்காத இடங்களில், அந்த மதிப்புள்ள நான்-ஜுடீஷியல் முத்திரைக் காகிதத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

'பதில் நடவடிக்கை பரிகாரமாகாது'

அறிஞர் அண்ணா தெளிவுரை

சென்னை, அக். 4—

சிவசேனை இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு பதிலாக பெரியார் எடுக்கவிருக்கும் நடவடிக்கை பற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோது, முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியதாவது :—

"பதில் நடவடிக்கைகள் இப்பிரச்சினைக்கு சரியான பரிகாரமாகாது என்பதே—'முதலமைச்சர்' என்ற முறையில்—என்னுடைய நிலையாகும்; ஆனால், பெரியார் எதுக்குப் போவதாகத் தெரிவித்துள்ள பதில் நடவடிக்கைகள், சிவசேனையின் நடவடிக்கைகள் எவ்வளவு கடுமையான உணர்ச்சிகளை உண்டாக்கி இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. இந்த உணர்ச்சியைக் கவனிக்க வேண்டுமென்றும், தமிழ் நாட்டில் மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் நிம்மதியாக வாழுவது போல நம்மாட்டிரந்திலும், மகாராட்டிரரல்லாதார் நிம்மதியாக எவ்விதப் பயமுமின்றி வாழும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மகாராட்டிர அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழ் நாட்டில் இப்போது நிலவும் அமைதி நிலை சீர்கெடாமல் பார்த்துக்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது."

நாளேடு. முன்னேற்றக் கழகத்தினரால், திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அபுலி அச்சகத்தில் (24, ஆனைமுகமுதலி செட்டித் தெரு, சென்னை-1) வெளியிடப்பட்டது.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சுதுமதியினர்—பதுக்கல்காரர்கள்—கள்ளச் சந்தையினர்!

இதைக் காண அல்ல—அவர் காலமெல்லாம் உழைத்தது! இந்தக் கேடுகளற்ற ஒரு தூய நாடு காணவே அவர் விரும்பினார்:

கோலையும் களவும், சுதும் குடியும் நிரம்பிய இடம், நாடு அல்ல—காடு! (காடுகூட அல்ல—அங்கு மது விற்பதற்காக ஓர் ஏற்பாடும் இல்லை; கொடுமையை மறைத்திட பட்டாடை இல்லை; பாதகத்தைச் செய்தும் தப்பித்துக் கொள்ள பணம் (எனும் ஆயுதம் இல்லை)!"